## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

**அ.சா. 7 (LW 12 )**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மோகன் | **தொழில்** | |
| **த/ பெயர்** | வெள்ளைச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **08.10.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**(ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் பி.அரவிந்தன் முன்பு விசாரணை நடத்தப்பட்டது . விசாரணை மொழி பெயர்த்து எதிரிகளுக்கு ஹிந்தி மொழியில் விளக்கி சொல்லப்பட்டது. )** 1வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 2வது எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது முத்தனங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 26.08.2022 அன்று காலை 11.00மணி அளவில் காவேரி மில் காம்பவுண்டு மேற்கு பக்கம் காலியிடம் முள்புதரில் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். அப்போது நான் அந்த வழியாக போகும் போது நானும் அங்கே சென்றேன். அங்கே ஒரு பாடி கிடந்தது. நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். போலிசார் என்னை எந்த ஊர் என்று விசாரித்தார்கள்.. இறந்தவரை தெரியுமா என கேட்டார்கள். தெரியும் என சொன்னேன். அப்போது அங்கே போலிசார் இரத்தம் பட்ட மண் சிறிதளவும், இரத்தம் படாத மண்ணையும், கல் ஒன்றும் எடுத்தார்கள். அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். அதில் நானும் செல்வம் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.2. ஆகும்**. அப்போது போலிசார் அங்கே வரைபடம் வரைந்தார்கள். அங்கே வரைபடம் வரைந்து மகஜர் தயார் செய்தார்கள். நான் அதில் கையெழுத்து செய்தேன். மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். அதில் நானும் செல்வம் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த மகஜர் **அ.த.சா.ஆ.3. ஆகும்**. என் முன்பாக போலிசார்கைப்பற்றிய இரத்தம் பட்ட மண் சிறிதளவு , இரத்தம் படாத மண்ணையும், கல் ஒன்றும் சான்று பொருட்கள் இதுதான். இரத்தம் பட்ட மண் சிறிதளவு **சா.பொ.1. ஆகும்.** இரத்தம் படாத மண் **சா.பொ.2. ஆகும்.** , கல் ஒன்று **சா.பொ.3. ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இறந்து போன ராம்குமார் எனது ஊர்க்காரர் ஆவார். நான் எதேச்சையாக வடமதுரைக்கு என்னுடைய பைக்கில் போனேன். சம்பவ இடத்தில் செல்வம் அங்கே இருந்தார். செல்வம் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்தான். அவர் எப்போது அங்கே போனார் என்று எனக்கு தெரியாது. நான் பிரேதம் கிடந்த இடத்திற்கு மணி சுமார் 10.00மணியிருக்கும். நான் அங்கே செல்லும் போது 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அங்கே இருந்தார்கள். போலிசார், இன்ஸ்பெக்டர் அங்கே இருந்தார்கள். போலிசார் அங்கே எவ்வளவு நேரத்திற்கு முன்பாக வந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. பிரேதம் கிடந்த இடம் ரோட்டுக்கு 200அடி தூரம்தான் . ரோட்டின் வடக்கு பக்கமாக இருந்தது. நான் போவதற்கு முன்பு பிரேதத்தை யார் எங்கு தூக்கி வைத்தார்கள், இரத்தமானது பிரேதத்திலிருந்து எங்கெல்லாம் சிந்தி கிடந்தது என்பது பற்றி தெரியாது. திண்டுக்கல் வடமதுரை ரோடு போக்குவரத்து அதிகமான ரோடு என்றால் சரிதான். இரவு நேரத்தில் ரோட்டை கடக்கும் போது விபத்து நடக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லும் போது இப்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கல்மட்டுந்தான் இருந்தது. வேறு கற்கள் இல்லை. முட்புதராகத்தான் இருந்தது. மில்லுக்கு மேற்கு புரத்தில் முட்செடிகள், புதர்கள்தான் இருந்தது. அந்த இடம் முழுவதும் சீமைக்கருவேல செடிகள் இருந்தது. நான் போவதற்கு முன்பு வேறு கூட்டம் அதிகமாக இருந்ததால் பிரேதம் கிடந்த இடத்தில் எந்த தடயத்தையும் பார்க்கவில்லை. நான் கையெழுத்திட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எழுதியிருந்தது கையெழுத்து போடச் சொன்னார்கள், கையெழுத்து போட்டேன். அ.த.சா.ஆ.2 மற்றும் அ.த.சா.ஆ.3. ஆவணங்களை யார் எழுதியது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் வாக்குமூலம் எதுவும் எழுதி வாங்கவில்லை. வழக்கு சம்மந்தமாக காவல்நிலையத்திற்கு போலிசார் என்னை கூப்பிடவில்லை . போலிசார் கைப்பற்றிய கல்லானது எந்த வகையான கல் என்று என்னிடம் குறிப்பாக சொல்லவில்லை. இறந்து போன ராம்குமார் என் ஊர்க்காரர் என்பதால் என்னை காவல்நிலையம் வரச் சொல்லி ஆவணங்களில் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரியல்ல. போலிசார்சொல்லிக் கொடுத்தன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:17:15 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.